**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு கொழும்பு மாநகர சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557 ஆம் இலக்க மற்றும் 2558 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. முன்னேற்றப்பட்ட கடற்கரையோரம் மற்றும் நாடளாவிய நீர்த் தரத்தின் விளைவாக தூய்மை மற்றும் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனூடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள 1.5 மில்லியன் நகர மற்றும் புறநகர் குடியிருப்பாளர்களிற்கான நகர சுற்றாடல் மற்றும் பொதுச் சுகாதார நிலைமையை முன்னேற்றுதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளன. (அ) கழிவு நீர் உட்கட்டமைப்பை தரமுயர்த்துதல். (ஆ) சொத்து முகாமைத்துவத்தின் நிறுவக ரீதியான மற்றும் செயற்பாட்டு ரீதியான இயலளவு, நிதி முகாமைத்துவம், செயற்பாட்டு ரீதியான செயலாற்றலை கண்காணித்தல், சுற்றாடல் ஒழுங்குமுறைமை இணக்கப்பாடு, நுகர்வு சேவை மற்றும் முறையான சுத்தப்படுத்தல் சேவைகளை வலுப்படுத்துதல் (இ) செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிறுவக ரீதியான ஆதரவு ஆகிய பெயரிலான கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவக் கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகிறது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 12,597.11 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110.24 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 10,783.65 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. ரூபா 1,813.46 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 15.87 மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 இல் ஆரம்பித்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதியானது 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு

போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | வழிநடாத்தல் குழு கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டில் இரண்டு வழிநடாத்தல் குழு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி மற்றும் தொடர்ந்து மாறிவரும் அமைச்சின் நோக்கெல்லை காரணமாக கூட்டங்களை நடாத்துதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுவின் கூட்டங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் நான்கு கூட்டங்கள் ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும். |
| (இ) | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2.2.7 மற்றும் 07 ஆம் பிரிவு | செயற்திறனின்மை காரணமாக இச்செயற்திட்டம் மேலும் 08 ஆண்டுகள் நீடிக்கப்பட்டிருந்தது. நீட்டிக்கப்பட்ட காலப்பகுதியின் போது | உரிய ஒப்பந்ததாரரின் வினைத்திறனின்மை செயற்திட்ட கால நீட்டிப்பை பெரிதும் பாதித்தது. எனினும் பதவியணியினரின் வினைத்திறனின்மையால் | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயலாற்றல் மதிப்பீடு இல்லாமல் 12 உத்தியோகத்தர்களுக்கு சம்பள ஏற்றமாக ரூபா 2.3 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | இந்த தாமதங்கள் ஏற்படுகின்றன என்பது உண்மையல்ல. |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| **கூறு** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம்** | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|
| **<u>பிரதான கழிவுநீர் முறைமையை புனரமைத்தல்</u>**<br>கழிவு நீர் பம்பி நிலையம் மற்றும் பம்பி பிரதானிகளை வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல். | | | செயற்திட்டம் 2010 ஏப்ரல் 9 இல் தொடங்கப்பட்டு 2015 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் இறுதி திகதி 2023 யூன் 30 வரை 6 முறை நீடிக்கப்பட்டுள்ளது. | ( சாத்தியவள ஆய்வுகள், அசுற்றுச்சூழல் மதிப்பீடு, காணி ) சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற செயன்முறைகளில் தாமதங்கள் ஏற்படுவதால் செயற்திட்ட முகாமைத்துவத்தில் உள்ள பலவீனங்கள் பாதிக்கப்பட்டன.<br>( கொள்கை ஆதரவுக் அகுழுவிலிருந்து எதிர்பார்த்த ) ஆதரவு பெறப்படவில்லை.<br>( ஒப்பந்ததாரரின் மோசமான இசெயலாற்றல். ) |
| பம்பி நிலையங்கள் | | | | |
| வனத்தமுல்ல | 100 | 99 | | |
| மாளிகாவத்தை | 100 | 77 | | |
| பொறளை | 100 | 73 | | |
| பம்பலப்பிட்டி | 100 | 99 | | |
| வைஸ்ட்வைக் | 100 | 76 | | |
| திம்பிரிகஸ்யாய | 100 | 81 | | |
| CS3 | 100 | 99 | | |
| சிலேவ் (Slave) தீவு | 100 | 98 | | |
| பம்பி பிரதானிகள் | | | | |
| வனத்தமுல்ல | 100 | 70 | | |
| வைஸ்ட்வைக் | 100 | 70 | | |

**முகாமைத்துவத்தின் பதில்** தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் ஒப்பந்தக் கடப்பாடுகள் காரணமாக, ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றலே ஒப்பந்தம் தாமதமாவதற்கு முக்கிய காரணமாகும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** தேவையான தர நிலையை உறுதிசெய்து உடனடியாக பணிகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் மீது செயற்திட்டம் தாக்கம் செலுத்த வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு மாநகர சபையின் கழிவுநீர் பம்பி நிலையங்களை வடிவமைத்தல், நிர்மாணித்தல், நிறுவுதல் மற்றும் புனரமைத்தல் தொடர்பான ஜீசீடபிள்யூஎம்பி/ஏடிபீ/பிஎஸ்/01/ஐசீபீ/வேலைகள்/03/2013 ஆம் இலக்க ICB ஒப்பந்தத்தின் கீழ் €887,104, ஐ.அ.டொலர் 937,976 மற்றும் ரூபா 52.4 மில்லியன் பெறுமதியான கட்டாய உதிரிப்பாகங்களை வழங்குவதற்கு இணங்கப்பட்டுள்ளது. எனினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு €739,906, ஐ.அ.டொலர் 777,736 மற்றும் ரூபா 52.4 மில்லியன் பெறுமதியான கட்டாய உதிரிப்பாகங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | தற்போது வழங்கப்பட்ட உதிரி பாகங்களின் இருப்பு மற்றும் மேலும் வழங்கப்பட வேண்டிய கட்டாய உதிரி பாகங்களை வழங்குதல் தொடர்பாக செயற்திட்ட அலுவலகமும் கொழும்பு மாநகர சபையும் உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| வைஸ்ட்வைக், பொறளை, திம்பிரிகாசய மற்றும் மாளிகாவத்தை ஆகிய 04 பம்பி நிலையங்களின் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய முடியாத காரணத்தினால், அந்த 04 பம்பி நிலையங்களுக்காக 2016 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை 2022 திசெம்பர் 31 வரை பம்பி நிலையங்களில் நிறுவ முடியவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்டக் காலம் முடிவடைவதற்குள் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2557/2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2010 ஏப்ரல் 04 இல் தொடங்கப்பட்டு 2015 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது, எனினும் செயற்திட்டத்தின் இறுதி திகதி 2023 யூன் | தவிர்க்க முடியாத காரணங்கள் மற்றும் ஒப்பந்தக் கடப்பாடுகள் காரணமாக ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. | செயற்திட்டக் காலம் முடிவடைவதற்குள் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 30 வரை நீடிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் 96 மாதங்கள் தாமதமாகியிருந்தது. | | |
| (ஆ) | செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் எழும் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்கும் நோக்கில் கொழும்பு மாநகர சபை, உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மேல் மாகாண சபை ஆகியவற்றின் அதிகாரிகளை உள்ளடக்கிய கொள்கை ஆதரவு குழுவொன்று 2010 ஆம் ஆண்டு முதல் நியமிக்கப்பட்டதுடன் அந்த அதிகாரிகளுக்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்பளமாக ரூபா 39.6 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்தம் செய்யப்பட்ட கால எல்லையினுள் கடனைப் பயன்படுத்த முடியவில்லை, அதன் விளைவாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாத கடன் மீதிக்கான கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 120.5 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் மேற்படி கொள்கை ஆதரவுக் குழுவிடமிருந்து இச் செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்ப்படுத்துவதற்கு உதவிகள் கிடைக்கப்பெறாதமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் கொள்கை ஆதரவு குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. | செயற்திட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் அவற்றின் செயலாற்றலை மதிப்பீடு செய்யவதற்கும் தீவிரமாக பங்களிக்க வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும் 03 பம்பி நிலையங்களின் நிர்மாணம் கைவிடப்பட்டது. எனினும் பொல்வத்தை பம்பி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் உள்ளூர் நிதியளிப்பின் கீழ் தொடங்கப்பட்டன. | சம்பந்தப்பட்ட பம்பி இல்லங்கள் அவசியமில்லை. | அமுல்ப்படுத்தும் முகவராண்மை மூலம் விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

### 3.5 கள விஜயங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| வைஸ்ட்வைக், பொறளை, திம்பிரிகாசய மற்றும் மாளிகாவத்தை ஆகிய 04 பம்பி நிலையங்களின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்ய முடியாத காரணத்தினால் தற்காலிகத் தீர்வாக மாற்று வழி முறையில் கழிவு நீரை இறைக்க வேண்டியிருந்தமையும், இதனால் இச்செயற்திட்டம் எதிர்பார்த்த நலன்களை உருவாக்க முடியாதுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்டக் காலம் முடிவடைவதற்குள் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 தீர்வு காணப்படாதுள்ள முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| வடிகாலமைப்பு பிரிவுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா 3.2 மில்லியன் பெறுமதியான நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு முறைமை 2017 முதல் விளைவற்றிருந்தது. | புதிய பதவியணியினரிற்கு பயிற்சியளிப்பதற்கு CMC மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெளிநாட்டு முதலீட்டை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 சுற்றாடல் விடயங்களுடன் தொடர்புடைய சிக்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| மூன்று பம்பி நிலையங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 24 இல் அந்த பம்பி நிலையத்தின் முன்-செயற்படுத்தல் சோதனையின் போது சிலேவ் தீவு பம்பி இல்லத்தில் பலவீனம் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் பிரதான குழாய் முறைமை சேதமடைந்துள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன் கழிவுநீர் திறந்த கால்வாய் ஊடாக பெய்ரா ஏரிக்கு வெளியேற்றப்பட்டு சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தியமை மேலும் அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தரமான நிர்மாணத்தை மேற்கொள்வதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பு தடுக்கப்படுதல் வேண்டும். |